***459 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டைத் துணை வட்டத்தில், கன்னிகைப்பேர், பெரிய வண்ணான்குப்பம், செஞ்சியகரம் ஆகிய அரிசன காலனி மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் தற்போது எந்நிலையி லுள்ளது ?

THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU : (1) With regard to Kannigaipair Village notification under section 4 (1) was approved and published in *Tamil Nadu Government Gazette*, Declaration under section 6 has been received from the Collector and it is under consideration of the Government.

(2) With regard to Vannancuppam Village the land has been taken possession of and the layout is pending approval with the Engineer, Periacuppam Panchayat Union.

(3) With regard to Senjiagaram declaration under section 6 has been approved and published in *Tamil Nadu Government Gazette*.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும் விபரமாகச் சொன்னார்கள். அதற்கு என்னுடைய நன்றி. ஆனால் அரசாங்கம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்க வேகமாக நடவடிக்கை எடுத்து வந்தும், நில ஆர்ஜிதம் செய்து வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் பல்லாண்டு காலமாக வீட்டுமனைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அரிசன மக்கள் விரக்தியடைகிறார்கள். எனவே, காலதாமதத்தை தவிர்க்க, துரித நடவடிக்கை மேற்கொள்ள அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இது நீண்டகால பிரச்னையாக இருப்பதால், அந்த மக்களுக்கு எல்லாம் விரைவிலே நிலம் கொடுக்க, அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டும் வருகின்றன. அப்படிச் செய்கின்ற நேரத்தில் சிலசமயங்களில், நில ஆர்ஜிதம் செய்வதில் சில இடையூறுகள் இருப்பதால், சற்று காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. அந்த கால தாமதத்தையும் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.